RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 219 ஆகஸ்டு.15 2026 சனிக்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# சுதந்திர தின சிறப்புப் பதக்கங்கள் பெறும் 15 காவல் அதிகாரிகள் பட்டியல்: தமிழக அரசு வெளியீடு

**சென்னை: ஆக.15–**

2026ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறப்புப் பதக்கங்கள் பெற உள்ள 15 காவல்துறை அதிகாரிகள் / சார்நிலை அலுவலர்கள் குறித்த பட்டியலை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புலன் விசாரணைப் பணியில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியதை அங்கீகரிக்கும் வகையிலும், பணியில் ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்புடன் பணிபுரிந்ததை பாராட்டும் வகையிலும் கீழ்கண்ட 10 காவல்துறை அதிகாரிகள் / சார்நிலை அலுவலர்களுக்கு 2026 ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழக முதல்வரின் காவல் புலன் விசாரணைக்கான சிறப்புப்பணிப் பதக்கங்கள் வழங்க தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்:

1. சி.ஜெயஸ்ரீ, காவல் துணை கண்காணிப்பாளர், கும்மிடிபூண்டி உட்கோட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

2. நா.தமிழரசி, காவல் துணை கண்காணிப்பாளர், திருவள்ளூர் உட்கோட்டம், திருவள்ளூர் மாவட்டம்.

3. கொ.அழகுராஜ், காவல் ஆய்வாளர், சைபர் கிரைம் காவல் நிலையம், கோவை மாநகரம்.

4. ந.தனுசியா, காவல் துணை கண்காணிப்பாளர், ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு, குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை, திருச்சி மாநகரம்.

5. சே.லதா, காவல் ஆய்வாளர், தனி சிறுவர் காவல் உதவி பிரிவு, கோவை மாநகரம். த.பி.பா.

6. வி.கோமதி காவல்துறை உதவி தலைவர், நிர்வாகம், காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம், சென்னை.



7. மா.சித்ரா, காவல் ஆய்வாளர், கைகளத்தூர் காவல் நிலையம், பெரம்பலூர் மாவட்டம்.

8. ரா.வினதா, காவல் ஆய்வாளர், மேல்மலையனூர் காவல் நிலையம், விழுப்புரம் மாவட்டம்.

9. கோ.மகாலெட்சுமி, காவல் ஆய்வாளர், மாவட்ட குற்ற பதிவேட்டு கூடம், சிவகங்கை மாவட்டம்.

10. ச.விஜயகுமார், காவல் துணை ஆணையர், மேற்கு, திருநெல்வேலி மாநகரம்.

இதே போன்று பொதுமக்களின் சேவையில் தன்னலம் கருதாமல் சிறப்பாக செயல்பட்டு சீரிய பணியாற்றிய கீழ்கண்ட 5 காவல் துறை அதிகாரிகள் / சார்நிலை அலுவலர்களுக்கு 2026 ம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு அவர்களது பணியைப் பாராட்டி சிறந்த பொதுச் சேவைக்கான தமிழக முதல்வரின் காவல் பதக்கங்கள் வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்:

1. டாக்டர் வி.சசி மோகன், இ.கா.ப, காவல்துறை துணைத்தலைவர், திண்டுக்கல் சரகம்.

2. தெ.சண்முக பிரியா, இ.கா.ப, காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம், மேற்கு சரகம், சென்னை.

3. சி.எம்.ஆர்.மணிமொழியன், துணை காவல் கண்காணிப்பாளர், தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, சென்னை.

4. க.மதன் மோகன், காவல் ஆய்வாளர் (தொழில்நுட்பம்), மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறை, சென்னை.

5. மு.ரவிக்குமார், தலைமை காவலர்1618, கரூர் நகர காவல் நிலையம், கரூர் மாவட்டம்.

விருதுகள் பெறுவோர் ஒவ்வொருவருக்கும் தலா எட்டு கிராம் எடையுடன் கூடிய தங்கப் பதக்கமும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் வெகுமதியும் வழங்கப்படும். மேற்கண்ட விருதுகள், தமிழக முதல்வரால் பிறிதொரு விழாவில் வழங்கப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தேசிய உணர்வை மேலும் வலுப்படுத்துவோம்" பிரிவினை துயரம் நினைவு நாளில் பிரதமர் வேண்டுகோள்

புதுடெல்லி, ஆக.15-

நல்லெண்ணம் மற்றும் ஒற்றுமை எனும் தேசிய உணர்வை நாம் மேலும் வலுப்படுத்துவோம் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியா பாகிஸ்தான் பிரிவினையால் நிகழ்ந்த துயரங்களை நினைவுகூறும் வகையில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 14ம் நாள், பிரிவினை துயரம் நினைவு நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த நாளை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு ஒன்றில், "நாம் இன்று பிரிவினைத் துயரம் நினைவு நாளை அனுசரிக்கிறோம். பிரிவினையால் பாதிக்கப்பட்ட அனைவரின் மன உறுதியையும் நாம் நினைவுகூர்கிறோம்.



அது வரலாற்றில் பலரது வாழ்க்கையைச் சிதைத்த ஒரு தருணமாக இருந்தது, குடும்பங்கள் வேரறுக்கப்பட்டன, அன்புக்குரியவர்களை பலர் இழந்தனர், அளப்பரிய துயரங்கள் அனுபவிக்கப்பட்டன.

அதே வேளையில், அந்த சூழலைக் கடந்து மக்கள் ஒன்றுமில்லாத நிலையில் இருந்து தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டமைத்தனர். இடர்களை வெற்றிகரமாக மாற்றினர். நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரும் பங்களிப்பை வழங்கினர். அவர்களின் வாழ்க்கைப் பயணம் மனித மனதின் வலிமையை நமக்கு நினைவூட்டுகிறது.

இந்த நாள் நமது நாட்டில் நல்லிணக்கத் தையும் சகோதரத்துவத்தையும் பேணிக்காப்பதற்கான நமது உறுதியை வலுப்படுத்தட்டும். அத்துடன் வளர்ச்சி அடைந்த இந்தியா எனும் இலக்கை நோக்கி நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்." என்று தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில், "பிரிவினைத் துயரம் நினைவு நாளில், அந்த பயங்கரமான காலகட்டத்தில் இருந்து மீண்டு வந்து நாட்டின் முன்னேற்றத்துக்கு விலைமதிப்பற்ற பங்களிப்பை வழங்கிய நாட்டின் அனைத்து மக்களுக்கும் மனமார்ந்த வணக்கங்கள்.

கடினமான சூழலிலும் எவ்வாறு உறுதியான இலக்குகள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை அவர்கள் தங்கள் துணிச்சல் மற்றும் வலிமையின் மூலம் நிரூபித்தனர். நல்லெண்ணம் மற்றும் ஒற்றுமை எனும் தேசிய உணர்வை இந்நாளில் மேலும் வலுப்படுத்துவோம்.

முயற்சிகள் மூலமே பல்வேறு கலைகள் வெளிப்படுகின்றன. அஞ்சி நடுங்குவோர் மட்டுமே புலம்புவர். நடப்பது நடக்கும்." என தெரிவித்துள்ளார்.

# முதலமைச்சர் கோப்பை: வெளிமாநிலத்தவர்கள் அதிகளவில் பங்கேற்க வாய்ப்பு! சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு

திருச்சிராப்பள்ளி, ஆக.15-

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் வெளிமாநில மாணவர்கள் அதிகளவில் பங்கேற்பக வாய்ப்பிருப்பதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

முதலமைச்சர் கோப்பை 2026 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் வரும் செப்.04 ஆம் தேதி முதல் நடைபெறவுள்ளன. இந்த விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான முன்பதிவு வரும் ஆகஸ்ட் 06 ஆம் தேதி தொடங்கிய நிலையில் ஆகஸ்ட் 31 ஆம் தேதி மாலை 06.00 மணி வரை நடைபெறவுள்ளது.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க https://tncmtrophy.sdat.in/register என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். இப்போட்டிகளில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், அரசு ஊழியர்கள், பொதுப்பிரிவினர் கலந்து கொள்ளலாம். மொத்தமாக 45 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.



அதைத் தொடர்ந்து, இப்போட்டிகளுக்கான பயிற்சிப் போட்டிகள் தற்போது திருச்சி அண்ணா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுடன் கர்நாடகா, ஆந்திரா போன்ற பிற மாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகளும் பங்கேற்பதாக சமூக ஆர்வலர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வெளிமாநிலத்தவர்கள் எப்படி?

இது குறித்து சமூக ஆர்வலர்கள் செந்தில், தாமஸ் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். அவர்கள் கூறுகையில், "கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வரை முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்வதற்கு, ரேஷன் கார்டு அல்லது இருப்பிட சான்றிதழை அடிப்படையாகக் கொண்டே முன்பதிவு செய்யப்பட்டது.

இதனால் தமிழ்நாடு மாணவர்கள் மட்டுமே இத்திட்டத்தின் முழு பலனை பெற்று வந்தனர். கடந்த மூன்று ஆண்டுகளாக நேரடி பதிவுகள் தவிர்க்கப்பட்டு ஆன்லைன் மூலம் மட்டுமே பதிவுகள் நடைபெறுகின்றன. அடையாள சான்றாக அடையாள அட்டை மட்டுமே கேட்கப்படுவதால், தமிழ்நாட்டில் தற்காலிகமாக கல்வி பயிலும் அண்டை மாநில மாணவர்களும் எளிதில் பதிவுச் செய்து போட்டிகளில் பங்கேற்கின்றனர்.

போட்டிகளில் வழங்கப்படும் ரொக்கப் பரிசுகளுக்காகவும், அரசுப் பணிகளில் கிடைக்கும் முன்னுரிமை சான்றிதழ்களுக்காகவும், வெளிமாநில மாணவர்கள் கலந்து கொள்வதால், தமிழ்நாடு மாணவர்களின் வாய்ப்புகள் பறிபோகிறது. எனவே, முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் பங்கேற்பதற்கு விண்ணப்பிக்க பழைய முறைப்படி ரேஷன் கார்டு மற்றும் இருப்பிட சான்றிதழைக் கட்டாயமாக்க வேண்டும்.

நடவடிக்கை வேண்டும்

தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் தலைமையிலான அரசு தமிழ்நாட்டு இளைஞர், இளம்பெண்கள் மீது மிகுந்த கவனம் செலுத்தி நிறைய திட்டங்களை அறிவித்து வருகிறது.

அதேபோல் இந்த முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் தமிழ்நாடு மாணவ, மாணவிகள் மட்டும் கலந்து கொள்ளும்படி உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தமிழ்நாடு முதலமைச்சரும், விளையாட்டுத்துறை அமைச்சரும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னை மற்றும் முக்கியப் பகுதிகளைத் தாண்டி தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்கும் வகையில் விளையாட்டுத்துறையில் அனைத்து விதமான விளையாட்டுகளுக்கும் முறையான பயிற்சியாளர்களை நியமிக்க வேண்டும்.

இதன்மூலம் சர்வதேச மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாட்டு மாணவர்கள் தங்கம் வெல்ல ஏதுவாக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வலியுறுத்தியுள்ளனர்.

# நேரு விளையாட்டரங்கில் ரூ.8 கோடியில் புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை ஓடுதளம்

## அமைச்சர் ஆதவ் அர்ஜுனா திறந்து வைத்தார்

சென்னை, ஆக.15-

சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கில் ரூ.8 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை தடகள ஓடுதளத்தை விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா நேற்று திறந்து வைத்தார்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் தமிழக விளையாட்டு வீரர்களுக்கு தேசிய, பன்னாட்டு தரத்துக்கு இணையான பயிற்சி வசதிகள் கிடைக்கும் வகையிலும், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மாவட்டந்தோறும் விரிவுபடுத்தும் நோக்கிலும் கடந்த 3 மாதங்களில் சென்னை, அரியலூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், கிருஷ்ணகிரி, விருதுநகர், விழுப்புரம், கடலூர், தருமபுரி, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் தடகள எறிதல் மையம், செயற்கையிழை ஹாக்கி மைதானங்கள், பாரா விளையாட்டரங்கங்கள், முதல்வர் விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளம் ஆகியவை ரூ. 31 கோடி மதிப்பீட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, திருவண்ணாமலை, நீலகிரி, ஈரோடு, தஞ்சாவூர் ஆகிய 9 மாவட்டங்களில் செயற்கை இழை தடகள ஓடுதளங்கள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. ராமநாதபுரம், சேலம், கடலூர் ஆகிய 3 மாவட்டங்களில் ரூ.38.24 கோடி மதிப்பில் புதிய செயற்கை இழை தடகள ஓடுதளங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கம், ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் ரூ.8 கோடியில் புதுப்பிக்கப்பட்ட செயற்கை இழை தடகள ஓடுதளத்தை விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா நேற்று திறந்து வைத்தார்.

# கரூர் சம்பவம்: அரசு வேலை ரத்து உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை

புதுடெல்லி, ஆக.15-

கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்கி தமிழக அரசு பிறப்பித்த அரசாணையை ரத்து செய்த சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

கரூர் மாவட்டம் வேலுச்சாமிபுரத்தில் கடந்த 2025 செப்.27ம் தேதி தவெக தலைவர் விஜய் பங்கேற்ற பிரச்சாரக் கூட்டத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 140க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இதுதொடர்பாக உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, சிபிஐ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, தேர்தலில் வெற்றி பெற்று முதல்வராக விஜய் பதவியேற்றதை தொடர்ந்து, கரூர் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் அரசு வேலை வழங்க முடிவு செய்யப்பட்டது. கரூரில் கடந்த ஜூலை 10ம் தேதி நடைபெற்ற நிகழ்வில், பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு அரசு வேலைக்கான பணி நியமன ஆணையை முதல்வர் விஜய் வழங்கினார்.

அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக நாதகவின் தீரன் திருமுருகன், மதுரை வழக்கறிஞர் சீனி அகமது உள்ளிட்ட 3 பேர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசுப் பணி வழங்கி பிறப்பித்த அரசாணையை ரத்து செய்து உத்தரவிட்டது.

இதை எதிர்த்து மாநில அரசு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கு நீதிபதிகள் ஜே.பி.பர்திவாலா, கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது.

மாநில அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, "மாநில அரசு கருணை அடிப்படையில் வேலை வழங்க விரும்பினால் அதில் உயர் நீதிமன்றத்துக்கு என்ன பிரச்சினை? வேலைவாய்ப்பு தொடர்பான விவகாரத்தில் பொது நல வழக்கு தொடர முடியாது." என்று வாதிட்டார்.

அப்போது நீதிபதி பர்திவாலா, "அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது. மக்கள் உயிரிழந்தனர். அவர்களுக்கு ஏதேனும் நிவாரணம் வழங்க அரசு முடிவு செய்தால் அதை எப்படி கேள்வி கேட்க முடியும்? ஒருவேளை அந்த விபத்தில் குடும்பத்தின் ஒரே வருமானம் ஈட்டும் நபர் உயிரிழந்திருந்தால், அவரது மகன் அல்லது மகளுக்கு அரசு வேலை வழங்கக்கூடாதா?" என்று கேள்வி எழுப்பினார்.

மனுவை எதிர்த்த வழக்கறிஞர் ஒருவர், "மாநில அரசுக்கு இதுபோன்று வேலைகளை வழங்கும் தனிப்பட்ட விருப்ப உரிமை இல்லை. நெரிசல் சம்பவத்துக்குப் பொறுப்பான தரப்பினரே தற்போது மாநிலத்தை ஆள்கின்றனர். எனவே, இந்த முடிவில் நலன்களின் முரண்பாடு உள்ளது." என்று வாதிட்டார்.

அப்போது, அந்த வழக்கறிஞர் யாரை பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்று நீதிபதி சந்திரன் கேள்வி எழுப்பினார். அதற்கு, அவர் ஒரு அரசியல் கட்சிக்காக ஆஜராகி உள்ளதாகக் கூறினார். அப்போது நீதிபதி சந்திரன், "இங்கு அரசியலைக் கொண்டு வராதீர்கள்" எனக் கூறினார்.

இதையடுத்து, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதித்த உச்ச நீதிமன்றம், மாநில அரசு மற்றும் பிறருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.



■ நீலகிரி மாவட்டம் உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை, தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் சார்பில், நீலகிரி மாவட்டத்தில் கார்பன் வெளியீட்டை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பான (Carbon Neutral Hubs) கலந்தாய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வன அலுவலர்கள் தேவராஜ் (கூடலூர்) கஷாப் சசாங் ரவி (கூடலூர் வன கோட்டம்), கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷாகௌர் உட்பட பலர் உள்ளனர்.

# உதகை ஜெல் மெமோரியல் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நீலகிரி உயிர்ச்சோலை புத்தகம் மற்றும் இணையதளத்தினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை இயக்குநர் வெளியிட்டார்



நீலகிரி, ஆக.15-

நீலகிரி மாவட்டம், உதகை ஜெல் மெமோரியல் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில், நீலகிரி உயிர்ச்சோலை புத்தகம் மற்றும் இணையதளத்தினை, மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் த ஆஷா அஜித் வெளியிட்டு தெரிவித்ததாவது:

நீலகிரி உயிர்ச்சோலை திட்டம், நீலகிரி மாவட்டத்தின் 51அரசுப் பள்ளிகளில் முதற்கட்டமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னெடுப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீலகிரியின் தனித்துவமான இயற்கைச் சூழல், வளமான உயிரினப்பன்மை, பாரம்பரிய அறிவு மற்றும் உள்ளூர் சமூகங்களின் வாழ்வியல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, கற்றலை மாணவர்களின் வாழ்வியலோடு இணைப்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இத்திட்டத்தின் முதற்கட்டமாக, நீலகிரி மாவட்டத்தில் உள்ள 51 அரசுப் பள்ளிகளில் பயிலும் 2,250 மாணவர்கள் இணைக்கப்பட்டனர். மாணவர்களுக்கு சுற்றுச்சூழல் குறித்த அறிவை வழங்குவதைக் கடந்து அவர்கள் வாழும் நிலப்பரப்பை நேரடியாகக் கற்றறிந்து, இயற்கையைப் புரிந்துகொண்டு, அதன் பாதுகாப்பில் பொறுப்புடன் பங்கேற்கும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கென "நீலகிரி உயிர்ச்சோலை" பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு 51 ஆசிரியர்களுக்கு இரண்டு கட்டங்களாக சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சியின் வாயிலாக, இயற்கை சார்ந்த நடைமுறைச் செயல்பாடுகள், ஆய்வுசார் கற்றல், கள அனுபவம் மற்றும் செயல்முறை சார்ந்த கற்றல் அணுகுமுறைகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. இதன்மூலம், வகுப்பறைக் கற்றலை இயற்கைச் சூழலுடன் இணைத்து மாணவர்களின் ஆர்வத்தையும் பங்கேற்பையும் அதிகரிக்கும் வகையில் கற்றல் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. மேலும், மாணவ,மாணவியர்கள் தங்களைச் சுற்றியுள்ள இயற்கை வளங்கள், தாவரங்கள், விலங்குகள், நீர்நிலைகள், காடுகள், உயிரினப் பன்மை மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை நேரடியாகக் கற்றறியும் வாய்ப்பைப் பெற்றனர். இதன் மூலம், "இயற்கையைப் பற்றி கற்றல்" என்பதிலிருந்து "இயற்கையோடு இணைந்து கற்றல்" என்ற மாற்றத்தை இத்திட்டம் ஏற்படுத்தியது. பாடத்திட்டத்தின் நிறைவில் மேற்கொள்ளப்பட்ட கற்றலுக்குப் பிந்தைய மதிப்பீட்டில், மாணவர்களின் சுற்றுச்சூழல் அறிவு, புரிதல் மற்றும் விழிப்புணர்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பதிவாகியது. இது அனுபவ அடிப்படையிலான மற்றும் இடம் சார்ந்த கற்றல் முறைகள் மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துவதில் சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியதை வெளிப்படுத்துகிறது.நீலகிரி உயிர்ச்சோலை திட்டம், பாரம்பரிய அறிவையும் நவீன அறிவியலையும் ஒருங்கிணைத்து, நீலகிரியின் இயற்கை வளங்களையும் உயிரினப் பன்மையையும் மாணவர்கள் புரிந்துகொள்ள வழிவகுக்கிறது. அதேவேளையில், இயற்கை மீதான அக்கறை, சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு மற்றும் நிலையான வாழ்க்கை முறைகள் குறித்த விழிப்புணர்வையும் மாணவர்களிடையே வளர்க்கிறது.இத்திட்டத்தின் நோக்கம் சுற்றுச்சூழல் குறித்த அறிவை மாணவர்களுக்கு வழங்குவதில் மட்டும் நிறைவடைவதில்லை. தாங்கள் வாழும் நிலப்பரப்பை புரிந்துகொண்டு, அதைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை ஏற்று, சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தை உருவாக்கும் திறன் கொண்ட தலைமுறையை உருவாக்குவதே இதன் தொலைநோக்குப் பார்வையாகும். இதன் மூலம் மாணவர்கள் விமர்சனச் சிந்தனையாளர்களாகவும்,பொறுப்புள்ள குடிமக்களாகவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாற்றத்தை உருவாக்கும் பசுமைத் தூதர்களாகவும் உருவெடுக்க வழிவகை செய்யப்படுகிறது. "நிலப்பரப்பை அறிந்து இயற்கையை நேசித்து உயிரினப்பன்மையைப் பாதுகாத்து நிலையான எதிர்காலத்தை உருவாக்குவோம்" என்ற சிந்தனையை மாணவர்களின் வாழ்வியலோடு இணைக்கும் ஒரு முன்னோடி முயற்சியாக நீலகிரி உயிர்ச்சோலை திகழ்கிறது. இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் மற்றும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு,இந்த சிறப்பான முன்னெடுப்பினை தமிழகம் முழுவதும் செயல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மேலும், மாணவ, மாணவியர்களாகிய தாங்கள் இயற்கை வளம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும், தங்களது வீடுகளில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து வழங்க வேண்டும் எனவும் அதிக அளவிலான மரக்கன்றுகளை நட்டுவைத்து முழுமையாக பராமரித்திட வேண்டும் எனவும் தெரிவித்தார்.முன்னதாக, நீலகிரி உயிர்ச்சோலை புத்தகம் மற்றும் இணையதளத்தினை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் அவர்கள் வெளியிட்டார்.இந்நிகழ்வின் போது, மாவட்ட வன அலுவலர் (நீலகிரி வன கோட்டம்) கஷாப்சசாங்ர கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருநாவுக்கரசு, தன்னார்வலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.







# ஸ்ரீ அதர்வாண காளி ஸ்ரீ மகா ரத்யங்கார் தேவி சக்தி மகா யாகப் பெரு விழா

பெரியகுளம், ஆக.15-


தேனி மாவட்டம் பெரியகுளம் அருகில் கைலாசநாதர் கோவில் மலையடிவாரம் உள்ள ஸ்ரீ ஜிஜி ல அல் சித்தா பாபாஜி ஆசிகளுடன். அருள்மிகு ஸ்ரீ அதர்வாண காளி ஸ்ரீ மகா ரத்யங்கார் தேவி சக்தி மகா யாகப் பெரு விழா. கடந்த 11 ஆண்டுகளாக உலக நன்மை வேண்டி சக்தி மகா யாகமானது நடைபெற்று வருகிறது. இந்த வருடம் ஆடி அமாவாசை பெருவிழாவானது மிக விமர்சையாக.நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் என பஞ்ச பூதங்களையும் குறிக்கும் பொருட்டு ஐந்து குண்டங்கள் அமைத்து மூன்று நாட்கள் காசிறப்பாக யாகம் நடைபெற்றது.இந்த அற்புத விழாக்கள் பாபுஜியின் அன்பு சீடர்களும் ஆன்மீக நண்பர்களும் கலந்து கொண்டு குரு அருள் பெற்று திருவருள் பெற்று சென்றனர்.தலைமை விழா குழு மகா வேள்வி விழாவினை ஸ்ரீ ஜி ஜி ல அல் சித் பாபாஜி. முன்னிலை ஸ்ரீ ரமணந்தா ஜி. சுவாமிகள் அகில பாரத துறவிகள் சங்கம் மற்றும் நிலையூர் ஆதீனம். ஸ்ரீ ல ஸ்ரீ சுப்பிரமணியானந்த குரு மகா சன்னிதானம். சிறப்பவிருந்தினர்கள். நீதி அரசர் விக்டோரியா கௌரி சென்னை உயர் நீதிமன்றம் டாக்டர்ஜெயராஜ் செல்வி மற்றும் ஜெ. தினேஷ் .ஷிங்வி கல்வி நிறுவனம் திண்டுக்கல்.சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈசிஆர் சரவணன் விலிகி. மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள். ராமகிருஷ்ணன் IPS Ret காவல்துறை கண்காணிப்பாளர். டாக்டர் ஜே அமலா தேவி எம் டி அன்னை பேரின்பம் மருத்துவமனை திண்டுக்கல் ராதிகா ரவி இந்தியா கேம்ஸ் ஹயரிங் ஹெட் - பிரிமியம் இன்ஜினியரிங் மற்றும் WILp.விபுகுமார்வீடியோகான் பைபாஸ் மாவட்ட இணைச் செயலாளர் தமிழ்நாடு அனைத்து வணிகர் சங்கங்களின் பேரவை அமைப்பு தேனி மாவட்டம்கே.சிவக்குமார் செயலாளர் நற்பணி செய்யும் பராமரிப்பு குழு கைலாசநாதர் கோவில் கைலாச பட்டி தென்கரை பேரூராட்சி சேர்மன் நாகராஜன் மாவட்ட அரசு வழக்கறிஞர் குணசேகரன் உத்தமபாளையம் ராம்ஜி தலைவர் இந்து எழுச்சி முன்னணி ராஜபாண்டி ஜி தேனி மாவட்ட தலைவர் பாரதிய ஜனதா கட்சி. மற்றும் சென்னை தொழிலதிபர் ஜெயராமன் foundear. MixEstar..engineaing pvt Ltd.சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சரவணன் இந்த நிகழ்ச்சியில் சிறப்பாக செய்திருந்தார் கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பாக உணவு ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்ச்சிக்கு ஏராளமான பொதுமக்கள் பக்தர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



# கடைசி ஆடி வெள்ளியை முன்னிட்டு இளவரசர் குடும்பத்தின் சார்பாக ஆயிரம் பேருக்கு அன்னதானம்

திண்டுக்கல், ஆக.15-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் கடைசி ஆடி வெள்ளி மற்றும் ஆடிப் பூரம் பண்டிகையை முன்னிட்டு, புதிய தாராபுரம் சாலையில் அமைந்துள்ள அருள்மிகு ரெணகாளி யம்மன் திருக்கோயிலில் பக்தர்களுக்குச் சிறப்பு அன்னதானம் மற்றும் சிறப்பு வழிபாடு விமரிசையாக நடை பெற்றது. இப்பண்டிகையை முன்னிட்டு இளவரசன் மற்றும் அவரது குடும்பத்தினரின் உபயத்தில், கோயிலுக்கு வருகை தந்த சுமார் ஆயிரம் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சிறப்பான முறையில் அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் பக்தர்களுக்கு பிரசாத பைகள் வழங்கப்பட்டனர் மேலும்கோயில் நிர்வாகத் தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நிர்வாகக் குழு உறுப்பினர்கள் திரளாகக் கலந்து கொண்டு தேவையான ஏற்பாடுகளைச் செய்தனர். பொதுமக்கள் பங்கேற்று அம்மனைத் தரிசனம் செய்து அன்னதானம் பெற்றுச் சென்றனர். அருள்மிகு ரெணகாளியம்மனின் அருள் அனைவருக்கும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திப்பதாகக் கோயில் நிர்வாகிகள் தெரிவித்தனர் மேலும் கோவில் நிர்வாகத்தின் சார்பாக வெள்ளி ரதம் மாலை முக்கிய வீதிகளில் உலா வரும் எனக் கூறினர்





■ சென்னை, திருநின்றவூர் பேருந்து நிறுத்தம் அருகில், வசந்த் – கோ புதிய கிளை மிக பிரம்மாண்டமாய் கோலாகலமாக திறக்கப்பட்டது. இதுவரை கண்டிராத மிகக் குறைந்த விலையில் திறப்பு விழா சிறப்பு சலுகை மற்றும் தள்ளுபடி விற்பனை மேலும் 25 ஆயிரத்துக்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு இலவச தங்க நாணயம் வழங்கப்படுகிறது. புதிய கிளையை திறந்து வைத்து, குத்துவிளக்கு ஏற்றி, கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. திறப்பு விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் நிர்வாக பங்குதாரர் வினோத் வசந்தகுமார் வரவேற்றார் . கட்டிட உரிமையாளர் ஸ்ரீதர் குடும்பம் மற்றும் வணிக உரிமையாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தா




■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், புதூர்நாடு ஊராட்சி கீழூர் பகுதியில் அமைந்துள்ள அரசு ஏகலைவா மாதிரி உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு, தலைமை ஆசிரியர் மற்றும் அனைத்து ஆசிரியர்களுடன் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (14.08.2026) அன்று கலந்துரையாடினார். உடன் மாவட்ட பழங்குடியினர் நல திட்ட அலுவலர் செந்தில்குமார், செல்வம் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேந்திரன், பள்ளி தலைமை ஆசிரியர் தங்கராசு, ஆசிரியர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.



# தார்ச்சாலைகள் சேதமடையும் வண்ணம் 'கேஜ் வீல்களை' பயன்படுத்தக்கூடாது

தேனி, ஆக.15-

தேனி மாவட்டம், பெரியகுளம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விவசாயப் பணிக்கான டிராக்டர்களில் அதிக எடையுள்ள கேஜ் வீல்களை பொருத்தி தார் சாலைகளில் இயக்குவதால் பல சாலைகள் சேதமடைந்து மேடு பள்ளங்களாக மாறி விபத்தை ஏற்படுத்தும் பகுதியாக மாறி வருவதாக புகார் வரப்பெற்றதைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், உத்தரவின்பேரில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் தார்ச்சாலைகள் சேதமடையும் வண்ணம் 'கேஜ் வீல்களை' பயன்படுத்தக்கூடாது என எச்சரிக்கை விடுக்கும் வகையில் அறிவிப்பு பலகைகள் அமைக்கப்பட்டுள்ளது.மேலும்,விவசாயிகளுக் குஅறிவுரைவழங்கும்பொருட்டுவேளாண்மை உழவர் துறைக்கும், தேவையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள காவல்துறை மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் ஆகியோருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, டிராக்டர்களில் அதிக எடையுள்ள கேஜ் வீல்களை பொருத்தி தார் சாலைகளில் இயக்குவதால் சாலைகள் சேதமடைவதுடன், பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு விபத்து ஏற்படும் அபாயம் உள்ளதால், சாலைப் பாதுகாப்பு மற்றும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, விவசாயிகள் கேஜ் வீல்களை விவசாய நிலங்களில் மட்டும் பயன்படுத்துமாறு நெடுஞ்சாலைத்துறையின் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.



■ தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம் புள்ளிமான்கோம்பை ஊராட்சி, தர்மத்துப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே சாலையில் குழாய் உடைந்து குடிநீர் வீணாவதாக புகார்வரப்பெற்றதைத் தொடர்ந்து,மாவட்டஆட்சித்தலைவர்மரு. இரா.வைத்திநாதன், உத்தரவின்பேரில், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் புள்ளிமான்கோம்பை ஊராட்சி, தர்மத்துப்பட்டி பேருந்து நிறுத்தம் அருகே சாலையில் ஏற்பட்ட குடிநீர் குழாய் உடைப்பு சரிசெய்யப்பட்டுள்ளது.

## யானைகள் அட்டகாசம்: 60 கி.மீ. சோலார் வேலி அமைக்க கோரிக்கை சேதமான பயிர்களை எம்.எல்.ஏ. பி.எஸ்.சீனிவாசன் நேரில் பார்வையிட்டார்

கிருஷ்ணகிரி, ஆக.15-
கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி அடுத்த சிகரலப்பள்ளி கிராமத்தில் காட்டு யானைகள் தொடர்ந்து விவசாய நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. யானைகளை அடர்ந்த வனப்பகுதிக்குள் விரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், வேப்பனப்பள்ளி தொகுதி திமுக எம்.எல்.ஏ. பி.எஸ்.சீனிவாசன் நேற்று சிகரலப்பள்ளி கிராமத்துக்கு நேரில் சென்று, யானைகளால் சேதமடைந்த பயிர்களை பார்வையிட்டார். தொடர்ந்து விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: வேப்பனப்பள்ளி தொகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் வனச்சரக பகுதிகளில் 20க்கும் மேற்பட்ட காட்டு யானைகள் முகாமிட்டு விவசாய பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன. கடந்த ஆட்சிக் காலத்தில் 40 கிலோமீட்டர் தூரத்திற்கு சோலார் மின்வேலி அமைக்கப்பட்டது. மேலும் 60 கிலோமீட்டர் தூரத்திற்கு சோலார் மின்வேலி அமைக்க வேண்டும் என அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். யானை தாக்குதலில் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 2 மாதங்களில் மட்டும் சுமார் 100 ஏக்கர் விவசாய நிலங்களில் பயிர்கள் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை உயர்த்தி, உடனடியாக வழங்க வேண்டும் என வனத்துறை அலுவலர்கள் மூலம் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். யானைகளால் ஏற்பட்ட பாதிப்புகளால் ஆத்திரமடைந்த 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை திரும்பப் பெற வேண்டும். யானைகளை விரட்ட நடவடிக்கை எடுக்காமல், பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீது வழக்குப்பதிவு செய்வது எந்த விதத்தில் நியாயம்? அரசின் இந்தப் போக்கை எதிர்க்கட்சித் தலைவரின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், கர்நாடக அரசு மார்க்கண்டேயன் நதியின் குறுக்கே அணை கட்டியதால், ஆற்றில் நீர்வரத்து இல்லாமல் 50க்கும் மேற்பட்ட கிராம ங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. தென்பெண்ணை ஆற்று நீரை மார்க்கண்டேயன் நதிக்கு கொண்டு செல்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து நீர்வளத்துறை மூலம் ஆய்வு மேற்கொள்ளவும் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும். இவ்வாறு எம்.எல்.ஏ. பி.எஸ்.சீனிவாசன் தெரிவித்தார்.

## டாஸ்மாக் ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன முழக்கம்




கிருஷ்ணகிரி, ஆக.15-
கிருஷ்ணகிரி டாஸ்மாக் மாவட்ட அலுவலகம் முன்பு, டாஸ்மாக் ஊழியர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தியும், தமிழக அரசின் டாஸ்மாக் நிர்வாகத்தை கண்டித்தும் தொ.மு.க. டாஸ்மாக் ஊழியர்கள் சார்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் சக்திவேல் முன்னிலை வகித்தார். மாநில செயலாளர் சஞ்சீவன் சிறப்புரையாற்றினார். மாவட்ட பொருளாளர் வேல்முருகன் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில், மதுபான சில்லறை விற்பனை கடை பணியாளர்களுக்கு பணி நிரந்தரம், காலமுறை ஊதியம் மற்றும் அரசு பணியாளர்களுக்கு இணையான சலுகைகள் வழங்க வேண்டும். மதுபான சில்லறை விற்பனையை தனியார் மயமாக்கும் முயற்சியை கைவிட வேண்டும். ஆன்லைன் மது விற்பனை திட்டத்தை கைவிட வேண்டும். அரசின் கொள்கை முடிவால் மூடப்படும் மதுபான கடை பணியாளர்களை, அரசின் இதர துறைகளில் காலியாக உள்ள நிரந்தர பணியிடங்களில் பணியமர்த்த வேண்டும். காலி மதுபான பாட்டில்களை திரும்பப் பெறும் பணியை தனியார் முகமை மூலம் மேற்கொள்ளப்படும் என்ற அமைச்சரின் வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். மதுபான கடை பணியாளர்கள் கூடுதலாக ஏற்க வேண்டிய கடை வாடகை, மின் கட்டணம், இறக்குக் கூலி, மதுபான வகை சேதாரம் உள்ளிட்ட செலவினங்களுக்கு உரிய தீர்வு காண வேண்டும். டிஜிட்டல் பரிவர்த்தனையை மாதந்தோறும் 5 சதவீதம் உயர்த்த பணியாளர்களை நிர்வாகம் வற்புறுத்துவதை கைவிட வேண்டும். மேலும், டாஸ்மாக் பணியாளர்களின் பணிக்கொடையை உயர்த்தி வழங்க வேண்டும். கல்வித் தகுதிக்கு ஏற்ப பணி உயர்வு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கண்டன கோஷங்களை எழுப்பினர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், நெல்லிவாசல் நாடு ஊராட்சி, மேல்பட்டு பகுதியில் உள்ள பொதுமக்களிடம் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (14.08.2026) அன்று கலந்து உரையாடி, அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்தார். உடன் வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜேந்திரன், நெல்லிவாசல்நாடு ஊராட்சி மன்ற தலைவர் அலமேலு மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.



## அரிவாள் தாக்குதல் வழக்கில் 4 பேர் கைது!

மானாமதுரை, ஆக.15-
சிவகங்கை மாவட்டம், மானாமதுரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட தே.புதுக்கோட்டை மற்றும் இளையான்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 12.08.2026 அதிகாலை, மர்ம நபர்கள் அரிவாளால் தாக்கியதில் இருவர் காயமடைந்தனர். தகவலறிந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சம்பவ இடத்துக்குச் சென்று பாதிக்கப்பட்டவர்களிடம் நேரில் விசாரணை நடத்தினார். இளையான்குடி மற்றும் மானாமதுரை காவல் நிலையங்களில் தனித்தனியாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அப்பகுதிகளில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகள் ஆய்வு செய்யப்பட்டன. விசாரணையில் முக்கிய குற்றவாளியான நிதிஷ்குமார் கைது செய்யப்பட்டார். மற்றவர்களைப் பிடிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. தனிப்படை காவல்துறையினர் தீவிர தேடுதல் நடத்தி, மானாமதுரை சின்ன புதுக்கோட்டையைச் சேர்ந்த சந்தோஷ்குமார், சாஸ்தா நகரைச் சேர்ந்த ஹரிஷ், கீழமேல்குடியைச் சேர்ந்த அஜய் கார்த்திக் ஆகிய மேலும் மூவரைக் கைது செய்தனர். இதன்மூலம் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.



■ கிருஷ்ணகிரி பாரத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், ஆகஸ்ட் 15ம் தேதி சுதந்திர தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளுக்கு மாறுவேட போட்டிகள் நடைபெற்றன.இதில் எல்கேஜி வகுப்பில் படிக்கும் மாணவி இக்ரா, சிங்கப்பெண் உடையணிந்து பங்கேற்று அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். சிங்கப்பெண் வேடத்தில் அவர் அளித்த சிறப்பான தோற்றம், நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களிடையே பாராட்டைப் பெற்றது.




## மீனாட்சி மிஷன் மருத்துவமனை குறித்து அவதூறு செய்தி: அகில இந்திய தேவர் பேரவை எச்சரிக்கை !!

மதுரை, ஆக.15-
மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை குறித்து உண்மைக்குப் புறம்பான செய்திகள் வெளியிடப்படுவதாகக் கூறி, அகில இந்திய தேவர் பேரவை சார்பாக புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர் சார்லஸ் மார்ட்டினுக்கு எதிராக உசிலம்பட்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பிவி கதிரவன் தலைமையில்கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.டாக்டர் என். சேதுராமனால் தொடங்கப்பட்டு, டாக்டர் எஸ். குருசங்கர் தலைமையில் செயல்பட்டு வரும் மருத்துவமனை தென் தமிழக மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவையை வழங்கி வருவதாக தெரிவித்தனர். மருத்துவமனை குறித்து வெளியிடப்பட்டதாகக் கூறப்படும் தவறான செய்திகளை உடனடியாக நீக்கி, பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என தனியார் நியூஸ் டிஜிட்டல் நிறுவனத்தினை வலியுறுத்தினர்.மன்னிப்பு கோராவிட்டால், சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் முன்பு அனைத்து மாவட்டங்களிலும் சட்டரீதியான போராட்டம் நடத்தப்படும் என்றும் எச்சரித்தனர். மேலும், விவகாரம் தொடர்பாக தமிழக அரசு உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூகத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நிகழ்வில் தென்னிந்திய பார்வர்ட் பிளாக் தலைவர் திருமாறன் ஜி உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## நோயாளிகளின் மருத்துவமனையா அல்லது எலிகளின் மருத்துவமனையா? வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் அச்சத்தில் பொதுமக்கள்!



திருப்பத்தூர், ஆக.15-
திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அரசு மருத்துவமனை பழைய கட்டிடத்தின் பின்புறம் 6 மாடிகள் கொண்ட புதிய மருத்துவமனை கட்டப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஆனால் மகப்பேறு மருத்துவ பிரிவு குழந்தைகள் பிரிவு ஆகியவை மட்டும் நுழைவாயிலில் உள்ள பழைய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.பழைய கட்டிடத்தில் உள்ள உள்நோயளிகள் பிரிவை புதிய கட்டிடத்திற்கு மாற்றிவிட்டு தற்போது உள்நோயாளிகள் பிரிவு மகப்பேறு பிரிவாக செயல்பட்டு வருகிறது.இந்த பிரிவில் வாணியம்பாடி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களை சேர்ந்த தாய்மார்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த நிலையில் அந்த மகப்பேறு பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள தாய்மார்கள் மற்றும் நோயாளிகளை அச்சுறுத்தும் வகையில் அதிக அளவில் எலிகள் சுற்றி திரிகிறது. இதனால் தாய்மார்கள் அச்சத்திலேயே தங்கள் சிசுக்களை பராமரிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அந்த மருத்துவமனை பழைய கட்டிடத்தில் ஆங்காங்கே உள்ள துளைகள் வழியாக எலிகள் மகப்பேறு பிரிவுக்குள் செல்வதாக கூறப்பகிறது.தற்போது மகப்பேறு பிரிவில் எலிகள் சுற்றி திரியும் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி யுள்ளது.குழந்தைகள் சிசுக்கள் உள்ள இந்த மகப்பேறு பிரிவை பாதுகாப்பான கட்டிடத்துக்கு மாற்ற வேண்டும் அல்லது அங்கு எலிகள் உள்ளே செல்லாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும் என்று நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்..



## சுதந்திர தினத்தையொட்டி மானாமதுரை ரயில் நிலையத்தில் தீவிரச் சோதனை!

சிவகங்கை, ஆக.15-
சிவகங்கை மாவட்டத்தில் சுதந்திர தினப் பாதுகாப்பை முன்னிட்டு, மானாமதுரை இருப்புப் பாதை காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வசந்தி தலைமையில் ரயில் நிலையம் மற்றும் வைகை ரயில்வே மேம்பாலப் பகுதிகளில் தீவிரச் சோதனை நடைபெற்றது.ரயில் நிலைய நடைமேடைகள், பயணிகளின் உடைமைகள், பயணச்சீட்டு வழங்கும் இடம், கார் மற்றும் இருசக்கர வாகன நிறுத்துமிடங்கள் உள்ளிட்ட பகுதிகளில் காவல்துறையினர் சோதனை மேற்கொண்டனர்.தனிப்பிரிவு சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜா, தலைமைக் காவலர்கள் சரவணன், செல்வம், மணிகண்டன் ஆகியோர் உடனிருந்தனர்.

## தேனியில் தடை செய்யப்பட்ட புகையிலை விற்பனை? கூட்டு நடவடிக்கை தேவை!




தேனி, ஆக.15-
தேனி நகரின் பல பகுதிகளில் 'கணேஷ்' புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகப் புகார் எழுந்துள்ளது. கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட பலர் இதனை அதிகளவில் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இந்தப் புகையிலைப் பொருட்கள் எங்கிருந்து கொண்டுவரப்படுகின்றன, யார் விற்பனை செய்கிறார்கள் என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும். உணவுப் பாதுகாப்புத் துறையினரும் காவல்துறையினரும் இணைந்து சோதனை மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை! இளைஞரை அரிவாளால் வெட்டிய பாட்டி!

கரூர். ஆக.15-
குளித்தலையில், சிறுமிக்கு பாலியல் வன்கொடுமை செய்ததாகக் கூறப்படும் இளைஞரை, அவரது பாட்டி நடுரோட்டில் விரட்டிச் சென்று அரிவாளால் வெட்டியதால் பரபரப்பு ஏற்பட்டது. கூலித்தொழிலாளியான சிறுமியின் தந்தை, மகளை அவரது பாட்டி வீட்டில் விட்டுச் செல்லுமாறு மாணிக்கம் என்பவரிடம் கூறியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மடத்துக்குளம் வட்டம், துங்காவி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் 108 பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

திருப்பூர், ஆக.15-

திருப்பூர்.மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் முன்னிலையில் திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், துங்காவி ஸ்ரீ முருகன் திருமண மண்டபத்தில் வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 108 பயனாளிகளுக்கு ரூ.87.54 இலட்சம் மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் ஆணைக்கிணங்க, பொதுமக்களுக்கான அடிப்படை தேவைகள் அனைத்தும் முழுமையாக கிடைத்திடவும், அவர்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாக தீர்வு கண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு ஊராட்சியை தேர்ந்தெடுத்து அரசுத்துறை அலுவலர்கள் அங்குள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து அதற்கான தீர்வும் காணப்பட்டு வருகிறது. மேலும், பல்வேறு அரசு துறைகளால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.அந்த வகையில் இன்றைய தினம், மடத்துக்குளம் வட்டம், துங்காவி கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்று வருகிறது. இந்த முகாமின் முக்கிய நோக்கம் மக்களின் குறைகளை தீர்வு காண்பது ஆகும். மேலும், தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் பற்றி தொடர்புடைய அலுவலர்கள் இங்கு பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைத்தார்கள். குறிப்பாக சமூகநலத்துறை, வேளாண்மைத்துறை, வருவாய்த்துறை, தாட்கோ, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பணிபுரியும் அலுவலர்கள் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும், இப்பகுதியில் உள்ள கிராமங்களுக்கு நேரடியாக களஆய்வு மேற்கொண்டு பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் குறித்தும் கலந்துரையாடி அப்பகுதி மக்களின் கோரிக்கைகள் மீது தனி கவனம் செலுத்தி தீர்வு காண வேண்டும். இந்த மக்கள் தொடர்பு முகாமில் அரசின் திட்டங்களை பற்றி பொதுமக்களுக்கு விரிவாக எடுத்துரைப்பதுடன் மட்டுமில்லாமல் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலம் மற்றும் துறை சார்ந்த அலுவலகங்களுக்கு வரும்போது அலுவலர்கள் பொறுமையாகவும் நிதானமாகவும் அரசின் திட்டங்கள் குறித்து எடுத்துரைக்க வேண்டும். 100% அனைத்து திட்டங்கள் குறித்தும், எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்பது பற்றியும், என்ன என்ன ஆவணங்கள் இணைக்க வேண்டும் என்பது பற்றியும் முழுமையாக எடுத்துரைக்க வேண்டும். பொதுமக்கள் அளிக்கும் அனைத்து கோரிக்கை மனுக்களுக்கும் உடனடியாக தீர்வு வழங்க வேண்டும், கோரிக்கை மனுக்களுக்கு தீர்வு வழங்க முடியாத பட்சத்தில் முறையான விளக்கத்தினை சமந்தப்பட்ட துறை அலுவலர்கள் மனுதாரர்களுக்கு தெரிவிக்க வேண்டும். கடைகோடி கிராமம் வரை அரசின் திட்டங்கள் சென்று சேர்வதை தொடர்புடைய அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும். இதற்கு மாவட்ட நிர்வாகம் முழு ஒத்துழைப்பு வழங்கும். தமிழ்நாடு அரசின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை முழுமையாக அறிந்து கொண்டு பொதுமக்கள் அனைவரும் பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள். இந்நிகழ்ச்சியில், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 30 பயனாளிகளுக்கு ரூ.58.14 இலட்சம் மதிப்பீட்டில் இபட்டாகளையும், 03 பயனாளிகளுக்கு ரூ.3.72 இலட்சம் மதிப்பீட்டில் நிறுத்தல் பட்டாகளையும், 08 பயனாளிக்கு பட்டா மாறுதல் ஆணைகளையும், 09 பயனாளிக்கு இணையவழி சான்றுகளையும், 04 பயனாளிக்கு பிறப்புச்சான்று பெயர் திருத்த சான்றுகளையும், 05 பயனாளிகளுக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் இயற்கை மரண உதவித்தொகையினையும், தாட்கோ சார்பில் 02 பயனாளிகளுக்கு ரூ.19.80 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவியினையும், 01 பயனாளிக்கு ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குயினர் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்ட கடனுதவியினையும், 03 பயனாளிகளுக்கு தூய்மைப்பணியாளர் நல வாரிய அட்டையினையும், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு தூய்மைப்பணியாளர் நல வாரிய அட்டையினையும், 01 பயனாளிக்கு ரூ.25,000/ மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட கருனைத் தொகையினையும், வேளாண்மை மற்றும் உழவர்நலத் துறையின் சார்பில் 01 பயனாளிக்கு ரூ.6,000/ மதிப்பீட்டில் மின்கல இயக்கு கைதெளிப்பனையும், 01 பயனாளிக்கு ரூ.6,000/ மதிப்பீட்டில் புல்வெட்டு இயந்திரத்தினையும், தோட்டக்கலைத்துறை சார்பில் 05 பயனாளிகளுக்கு ஆடிப்பட்ட விதை தொகுப்புகளையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் 11 கர்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து தொகுப்புகளையும், 10 பயனாளிகளுக்கு மக்களைத்தேடி மருத்துவ பெட்டகத்தினையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 04 பயனாளிகளுக்கு காது கேட்கும் கருவிகள் என 108 பய னாளிகளுக்கு ரூ.87,54,560/ மதிப்பீட்டிலான பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே வழங்கினார்.அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு, பல் வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்கள். இந்நிகழ்ச்சியில், உடுமலைப்பேட்டை வருவாய் கோட்டாட்சியர் குமார், இணை இயக்குநர் (வேளாண்மை) ஆதிசாமி, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) பத்மபிரியா, உதவி இயக்குநர் ஊராட்சிகள் கமலக்கண்ணன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சதீஸ், மாவட்ட மேளாலர் (தாட்கோ) (பொ) ரஞ்சித்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் (பொ) ஜெகஜோதி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஜெயந்தி, வட்டாட்சியர் (மடத்துக்குளம்) ரம்யா துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்..



■ திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஸ்ரீபுரம் அறக்கட்டளை சார்பில் சமூக நலப்பணிகளுக்காக ரூ.2.00 இலட்சத்திற்கான காசோலையை ஸ்ரீபுரம் அறக்கட்டளையின் தலைவர் சண்முகம் வழங்கினார்கள்.

# திருப்பூர் மாவட்ட ஆட்சியர் தலைமையில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது

திருப்பூர், ஆக.15-

திருப்பூர்மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தலைமையில்திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் மாவட்டங்களில் தடையின்றி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதை உறுதிபடுத்திட்ட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் திருப்பூர் மாவட்டத்தில் பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்திடும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாநகராட்சி, நகராட்சிகள், பேருராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. திருப்பூர் மாவட்டத்திலுள்ள மாநகராட்சி பகுதிகளில் உள்ள 60 வார்டுகளில் நாள்தோறும் பொதுமக்களுக்கு பல்வேறு திட்டங்களுக்கு கீழ் விநியோகிக்கப்படும் குடிநீர் அளவு குறித்தும், 6 நகராட்சிகள், 15 பேரூராட்சிகள், 13 ஊராட்சி ஒன்றியங்களை சார்ந்த 265 கிராம ஊராட்சிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வது குறித்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது., பொதுமக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்குவதை அலுவலர்கள் உறுதிப்படுத்த வேண்டும். மேலும் கிராம ஊராட்சிகளில் வரப்பெறும் புகார்களின் அடிப்படையில் உடனடியாக நேரில் களஆய்வு மேற்கொண்டு குடிநீர் வழங்கி வருவதை உறுதி செய்யவேண்டும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரத்தை உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும். குடிநீர் குழாய்கள் பழுது ஏற்படும் போது உடனடியாக சரி செய்து குடிநீர் வழங்க வேண்டும். குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வழங்கப்படும் குடிநீர் அளவினை உறுதி செய்து ஒத்திசைவு செய்யும் பொருட்டு சம்ப் மூலமாக வழங்கப்படும் அளவினையும், மேலும் ஊராட்சிகள், குக்கிராமங்களிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் பெறப்படும் குடிநீர் அளவினையும் கண்காணித்து ஆய்வு செய்ய வேண்டும். நாள்தோறும் பேரூராட்சி, நகராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளில் விநியோகிக்கப்படும் குடிநீர் அளவினை மின்னனு நீர்உந்து கருவி பொருத்தி கண்காணித்து சீரான குடிநீர் விநியோகம் தடையின்றி வழங்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர் மனிஷ் நாரணவரே தெரிவித்தார்கள்.இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் வாணி ஈஸ்வரி, நிர்வாகப்பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) செல்வ ராணி, உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) கமலக்கண்ணன், சதிஸ்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்..





# சிவகங்கையில் அதிமுகவினர் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை, ஆக.15-

விவசாயிகளின் பயிர்க்கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்யாததைக் கண்டித்தும், மேகதாது விவகாரத்தில் தமிழகத்திற்குரிய காவிரி நீரைப் பெற நடவடிக்கை எடுக்காத ரேகா அரசைக் கண்டித்தும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எ திரே அதிமுக சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பங்கேற்று கண்டன முழக்கங்களை எழுப்பினர்.





# சாலைக்கிராமம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணவருக்கு கத்திக்குத்து!

சிவகங்கை, ஆக.15-

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி அருகே சாலைக்கிராமம் அரசு மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நேற்று மாணவர்களிடையே மோதல் ஏற்பட்டது.இதன் தொடர்ச்சியாக இன்று சக மாணவர் கத்தியால் குத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. சம்பவம் குறித்து போலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்..

# வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத்திட்டம் (அட்மா) திட்டத்தில் பயறுவகைகள் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி

சிவகங்கை, ஆக.15-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டாரத்தில் வேளாண்மைத்துறை கீழ் இயங்கிவரும் (அட்மா)202627 ம் ஆண்டு, மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் மூலம் பயறுவகைகளில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சி பனங்காடி கிராமத்தில் நடைபெற்றது.அலுவலர் இக்கூட்டத்திற்கு சிவகங்கை மாவட்ட வேளாண்மை (உபநி) திரு வீரையா அவர்கள் தலைமை வகித்து கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயறு வகைகள் உயர் விளைச்சல் இரகங்கள் ( VBN 3,CO(Rg)7,BRG2 CO8,9), (2VBN6,7,8,9,10,11, CO7,ADT6,7, MDU1), (co8,9,VBN-3,4,5,7) விதையளவு (ஏக்கருக்கு) உளுந்து / பச்சைப்பயறு 8 கிலோ, துவரை 4 கிலோ போதுமானது என்றும், வரிசை நடவு, நுனிக்கிள்ளுதல், நாப்தலின் அசிடிக் அசிட், இலைவழி தெளிப்பு தெளிக்க வேண்டும் என்றும் நிலக்கடலை, சோளம், கம்பு உடன் பயறு வகை பயிர்களை ஊடுபயிராக பயிரிடுதல்,துவரையில் ஊடுபயிராக சூரியகாந்தி பயிரிடுதல் போன்ற பயிர்களை பயிரிட வேண்டும் என்றும் எடுத்து கூறினார். மகசூலை அதிகரிக்க 2 கிலோ யூரியாவை விதைத்த 30 (ம) 45 ஆம் நாளில் தெளிக்க வேண்டும் என்றும் நெல் தரிசு பயறுகளுக்கு 4 கிலோ டி.ஏ.பி. 200 லிட்டர் நீருடன் கலந்து கரைசலை வடிகட்டி தெளிக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். பயறு ஒன்டர் ஏக்கருக்கு 2 கிலோவினை பூக்கும் தருணத்திலும் பின் 15 நாள் கழித்தும் தெளிக்க வேண்டும் என்றும், வறட்சியை தாங்குவதற்கு பொட்டாசியம் குளோரைடு 20 கிராமை 1 லிட்டர் நீருடன் கலந்து இலை வழி தெளிப்பாக பயிர் வளர்ச்சி பருவத்தில் தெளிக்க வேண்டும் என்றும் எடுத்து கூறினார்.மேலும் இப்பயிற்சியில் திரு.குணசேகரன் (வேளாண்மை அலுவலர் ஒய்வு) அவர்கள் பூச்சி மேலாண்மை தொழில்நுட்பங்களான சாறு உறிஞ்சும் பூச்சிகள் (வெள்ளை ஈ,அசுவினி) கட்டுபடுத்த மஞ்சள் நிற ஒட்டும்டிபாறி அட்டைகள் ஏக்கருக்கு(5 எண்கள் பொருத்தல் வேண்டும் என்றும் வரப்பு பயிராக ஆமணக்கு, மக்காச்சோளம் மற்றும் ஊடுபயிராக சூரியகாந்தி பயிரிட வேண்டும் என்றும், காய்புழுக்கள் மேலாண்மைக்கு என்.பி. வைரஸ் 400 I.L. தெளித்தல், இனகவாச்சி பொறி 5 எண்கள் பொருத்தல் மற்றும் 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும் என்றும் மஞ்சள் தேமல் நோய் வேப்பெண்ணெய் 3 I.L / லிட்டர் நீருடன் தெளிக்க வேண்டும், வேர்அழுகல் நோய், சாம்பல் நோய், மலட்டுத்தேமல் நோய், ஆந்தராக்னோஸ் நோயை கட்டுபடுத்தும் தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார்.உதவி வேளாண்மை அலுவலர் திருமதி.சௌமியா அவர்கள் வேளாண்மை விரிவாக்க மையங்களில் உள்ள நெல் அவர்கள், இரகங்களான கோ51, கோ55, TKM 15 மற்றும் RNR இரங்கள், மற்றும் நுண்ணூட்ட உரங்கள் எக்டேருக்கு 12 .5 கிலோ மற்றும் அனைத்து பயிர்களுக்கு திரவ உயிர் உரங்கள் (50 சதவிதம் மானியத்தில்) போன்ற இடுபொருட்களின் இருப்பு விபரங்கள் பற்றிக் கூறினார். மேலும், விவசாயிகள் தங்கள் நிலங்களில் குறைந்த அளவில் நீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெறுவதற்கான தொழில்நுட்பங்களான





சொட்டு நீர்பாசனம் மற்றும் தெளிப்பு நீர்பாசனம் திட்டம் குறித்து எடுத்து கூறினார். காளையார்கோவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஜோதி அட்மா திட்ட விரிவாக எடுத்து கூறியும் வேளாண் இடுபொருட்கள் நுண்ணூட்டம் இடும்முறை பற்றி பேசினார். மேலும் பயறு வகைகளில் பன்முக பூக்கும் தொழில்நுட்பகளான விதைத்த 40 வது நாளில் மேலுரமாக பரிந்துரைக்கப்பட்ட அளவை விட கூடுதலாக 25 முதல் 30 தழைசத்து இடுதல் வேண்டும் என்றும் மற்றும் வேளாண்மைத் துறையின் மூலம் விநியோகிக்கப்படும், திரவ அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா, ரைசோபியம் இவைகளை பயன்படுத்தி பயிர்களில் விதைநேர்த்தி செய்வதன் மூலம் ஏற்படக்கூடிய பயன்பாடுகள் குறித்தும் விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். உழவர் செயலி பயன்படுத்தும் முறைகள் பற்றியும் மற்றும் அதில் உள்ள 24 முகப்பு விபரம் பற்றி விரிவாக எடுத்து கூறினார்.

காளையார்கோவில்காளிஸ்வரி தொழில்நுட்பமேலாளர் பயிற்சிக்கானஏற்பாடுகள் செய்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161